# ஆசிரை
# கிறிஸ்துவுக்கு புகழ்

**அன்பின் வாசக நெஞ்சங்களே!**

மே மாதம் மாதாவின் வணக்க மாதம். இம்மாதத்தில் தான் போத்துக்கல் நாட்டிலே பற்றிமா பதியிலே லூசியா, ஜசிந்தா, பிரான்சிஸ் என்ற மூன்று சிறுவர்களுக்கு மரியன்னை காட்சி கொடுத்தார். இந்த மூன்று பிள்ளைகளுக்கும் 1917ம் ஆண்டு மே மாதம் 13ம் திகதி தொடக்கம் அதே வருடம் ஒக்டோபர் மாதம் 13ம் திகதி வரைக்கும் ஆறு தடவைகள் ஒவ்வொரு 13ம் திகதியும் காட்சி கொடுத்தார். ஒவ்வொரு முறையும் செபமாலை ஓதும்படியும், குறிப்பாக நோயாளருக்காகவும், பாவிகளுக்காகவும், இன்னும் உத்தரிப்பு ஸ்தலத்திலிருக்கும் ஆன்மாக்களுக்காகவும் நன்றாக செபிக்கும்படியும் காட்சி கொடுத்து அழைப்பு விடுத்திருகின்றார்.

சென்ற வருடம் நாம் பத்திமா பதியில் அன்னை காட்சி கொடுத்து 100வது வருடத்தை நினைவு கூர்ந்தோம். மீண்டும் எம்மிடம் அதே மரியன்னை அதே கருத்துக்களுக்காக செபிக்கும்படி அழைப்பு விடுக்கின்றார். குறிப்பாக நாடுகளுக்கிடையில் ஏற்பட்டிருக்கும் வன்முறை, அதிகார ஆதிக்கம், வல்லரசுகளின் மிதமிஞ்சிய ஆணவபோக்கு, எல்லாம் என்னால் முடியும் என்ற திமிரான மனநிலை, பணம், சொத்து, செல்வம் இவைதான் எமக்கு வாழ்வு கொடுக்கின்றன என்ற மனப்போக்கு மாறும்படியாக செபிக்க இந்த நாட்களில் நாமும் அழைக்கப்படுகின்றோம்.

யுத்தம், போர், அழிவுகள் என்றெல்லாம் நாம் அறிந்து கொண்டிருக்கின்றோம். இவையெல்லாம் மனிதனையும், மனித குலத்தையும் அழிவுக்கு கொண்டுபோகும் வழிகளாகத்தான் உள்ளது. புதிய நவீன கண்டுபிடிப்புக்கள், தொலைத்தொடர்பு சாதனங்கள், விஞ்ஞானத்தின் வளர்ச்சி, நாடுகளின் அபாரமான அபிவிருத்தி போன்றவை மனித விழுமியங்களுக்கும், மனித மாண்பிற்கும் பெரும்பாலும் ஆபத்தானதாகவே உள்ளதை காணக்கூடியதாக உள்ளது. இவைகள் மனித மாண்புகளை, விழுமியங்களை வளர்க்க வேண்டும் என நாம் நம்புகின்றோம். ஆனால் அவை எமது விசுவாசதிற்கு சவாலாக எதிராக செயற்படுகிறது போலத்தான் காணக்கூடியதாக உள்ளது. "உயிர்த்த ஆண்டவரின் அனுபவம் நாம் சாட்சிகளாக வாழ எம்மைத தூண்ட வேண்டும்." ஆதிக்கிறிஸ்தவர்கள் முழுமையாக கிறிஸ்துவுக்கு சாட்சியாக வாழ்ந்தார்கள். திருத்தூதர்கள் வேதசாட்சிகளாக உயிர்த்த ஆண்டவர் இயேசுவுக்காக மரித்தார்கள்.

பல்வேறு நாடுகளுக்கு கால்நடையாக பல நாட்கள் நடைப்பயணம் செய்து கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவித்தார்கள். அதே சாட்சிய வாழ்வைத்தான் வாழ நாம் அழைக்கப்பட்டுள்ளோம். சாட்சிய வாழ்வு என்பது கிறிஸ்துவிற்காக வாழ்தல் என்பதாகும். தூய பவுல் அடிகளார் கூறுவதுபோல "கிறிஸ்துவுக்காக அனைத்தையும் குப்பையென கருதுகிறேன்." இயேசுவுக்காக எல்லாவற்றையும் துறந்து முற்றுமுழுதாக இயேசுக்கிறிஸ்துவின் நற்செய்தியை எடுத்துரைப்பதிலும், அதை வாழ்க்கையால் வாழ்ந்து காட்டுவதிலேயும் எல்லாவற்றையும் செலவளித்தார். நாமும் உயிர்த்த ஆண்டவரின் சாட்சிகளாக வாழவும் அழைக்கப்படுகிறோம். குறிப்பாக இந்த மாதத்தில் எமது மறைத்தளத்தில் மடு அன்னையின் யாத்திரை முன்னெடுக்கப்படுகிறது. ஓவ்வொரு வீடு வீடாக மரியன்னையின் திருச்சுருபத்தை எடுத்து செல்வதில் எல்லோரும் ஆர்வம் கொண்டவர்களாக இருக்க அழைக்கப்படுகிறோம். இதனூடாக மரியன்னையின் புகழையும், அவரின் மனப்பாங்கினையும் எடுத்துச்செல்ல நாம் அழைக்கப்படுகிறோம். இந்த வருடத்தில் மக்களின் ஒருங்கிணைந்த செயற்பாடும், தியாக உணர்வும் வெளிப்படுகிறது என்பதை நாம் அறிகிறோம். அன்னையின் நிறைவான பரிந்துரை எம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் கிடைக்க நாம் மன்றாடுவோமாக.

மரியே வாழ்க.

**நன்றி**

**அன்புடன்,**
**அருட்பணி யூட் நிக்ஸன்**
*Parish Priest*
*Our Lady of Deliverance Tamil Catholic Mission*